செ.வெ.எண்: 757/2016 நாள்: 25.10.2016

## செய்திக்குறிப்பு

**மாவட்ட அளவில் சேது இலக்குமிபாய் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் வைத்து பள்ளி மாணவ, மாணவர்களுக்கிடையே தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்நாகர்கோவில் சேது இலக்குமிபாய அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் 04.11.2016 ஆம் நாள் நடைபெறுதல் தொடர்பாக.**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நாகர்கோவில் சேது இலக்குமிபாய் அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியில் 04.11.2016 வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் நாகர்கோவில் சேது இலக்குமிபாய் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளன.

மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவர்களிடையே தமிழில் பேச்சாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்குத் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திட மாவட்ட ஆட்சியா அவர்களின் தலைமையின்கீழ் அரசு ஆணையின்படி ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர் அவர்கள் உள்ளார். இக்குழுவில் முதன்மைக் கல்வி அலுவலர் , திரு.தங்கசாமி தமிழாசிரியர், திருமதி.பி.சிவகுமாரி தமிழாசிரியர், திருமதி.வி.தங்கம் தமிழாசிரியர் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயற்பட நியமிக்கப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட நியமிக்கப்ட்டுள்ளார்.

மாவட்ட அளவில் தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவருக்கு முதல் பரிசுத்தொகையாக ரூ.10000/- , இரண்டாம் பரிசுத் தொகையாக ரூ.7000/-மும் வழங்கப்படும். பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். இப்போட்டிகள் 04.11.2016 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நாகர்கோவில் சேது இலக்குமிபாய் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளன. போட்டிகள் பற்றிய விவரங்கள் சுற்றறிக்கை வாயிலாக மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தெரிவிக்கப்படும்.

இப்போட்டிகள் மாவட்ட அளவில் முதலாவதாக வெற்றி பெறும் மாணவர்கள் சென்னையில் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

இப்போட்டிகளில் மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் சஜ்ஜன்சிங் ரா.சவான் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மாவட்ட ஆட்சியர்,**
**நாகர்கோவில்**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.